இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 22-10-2025

# ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக...!

**ஆ**ணவப் படுகொலைகளுக்கு எதிரான கடுமையான சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம் என்ற மகத்தான அறிவிப்பை மாண்புமிகு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு அரசு ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று உறுதி அளித்துள்ளார் முதல் அமைச்சர்.

**“இது குறித்து தேவையான பரிந்துரைகளை அளிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு.கே.என்.பாஷா அவர்கள் தலைமையில் சட்ட வல்லுநர்கள், முற்போக்குச் சிந்தனையாளர்கள், மானுடவியல் அறிஞர்களைக் கொண்ட ஒரு ஆணையம் அமைக்கப்படும் என்பதை என்னுடைய முக்கியமான அறிவிப்பாக இம்மாமன்றத்தில் அறிவிக்கிறேன். இந்த ஆணையம் அரசியல் இயக்கங்கள், சட்ட வல்லுநர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துகளையும் பெற்று, இப்பொருள் குறித்து உரிய பரிந்துரைகளை வழங்கும். அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்”** என்று உறுதி அளித்துள்ளார் முதல் அமைச்சர்.

சமூக நீதி வரலாற்றில், சமநீதி வரலாற்றில், சமூக சீர்திருத்த வரலாற்றில், பெண் உரிமை வரலாற்றில் இது மிகமிக முக்கியமான அறிவிப்பு ஆகும்.

கொலை வழக்குகள் உள்ளிட்ட குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றுத் தருவதற்கு இந்திய குற்றவியல் தண்டனைச் சட்டம் இருக்கிறது. பட்டியல் சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் இருந்து காக்க வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளது. நமது சட்டங்கள் மிக மிகக் கடுமையானவை. இதனை முறையாகப் பயன்படுத்தி, வழக்கை ஒழுங்காக நடத்தி தண்டனை பெற்றுத்தர முடியும். இது போன்ற ஆணவப் படுகொலை வழக்குகள் அனைத்திலும் கடுமையான பிரிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொடர்புடைய குற்றவாளிகள் உடனடியாகக் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். இருப்பினும் இதற்கென தனிச்சட்டம் தேவை என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

சிறுவர்கள், குழந்தைத் தொழில் தடுப்பு, ராகிங் தடுப்பு, ஈவ்டீசிங் தடுப்பு, குடும்ப வன்முறைத் தடுப்பு போன்ற பல சட்டங்கள் சமுதாயத்தில் பல நன்மைகளையும் மாற்றங்களையும் ஏற்படுத்தி உள்ளன. அந்த வரிசையில் இதனையும் நோக்க வேண்டி உள்ளது.

திராவிடர் கழகம் சார்பில் அக்டோபர் 4 ஆம் நாளன்று செங்கல்பட்டு மாநகரில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு திராவிடர் கழக மாநில மாநாடு நடைபெற்றது. அதில், **“ஜாதி ஆணவக் கொலைகளைத் தடுத்து நிறுத்த சட்டம் அவசியம் தேவை”** என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அம்மாநாட்டில் உரையாற்றிய முதல் அமைச்சர் அவர்கள், **“மானமிகு ஆசிரியர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்துள்ள மாநில மாநாட்டுத் தீர்மானங்களைப் பார்த்தேன். சமூகக் களத்தில் நீங்கள் அதற்கான பரப்புரையைச் செய்யுங்கள். திராவிட முன்னேற்றக் கழகமானது ஆட்சியைப் பயன்படுத்தி சட்டங்களாக, விதிமுறைகளாக, நெறிமுறைகளாக வகுப்போம்”** என்று உறுதி அளித்தார்கள். அத்தகைய உறுதிமொழியை உடனடியாகச் செயல் வடிவம் கொடுத்து விட்டார் முதல் அமைச்சர் அவர்கள்.

இதனைத்தான் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களும் சுட்டிக் காட்டி வாழ்த்தி இருக்கிறார்கள். **“1929 செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க முதல் மாகாண மாநாட்டின் தீர்மானங்களைச் சட்டமாக்கிட 40 முதல் 60 ஆண்டுகள் ஆயின. ஆனால், 4.10.2025 செங்கல்பட்டு மறைமலைநகர் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டுத் தீர்மானங்கள் அடுத்த 13 நாள்களில் செயல்பாட்டுக்கு வர ஏற்பாடுகள் தொடக்கம்! என்னே வேகம்! என்னே விவேகம்!!இதுதான் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மாட்சி!”** என்று பாராட்டி இருக்கிறார் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

‘திராவிட மாடல்’ ஆட்சியின் உண்மையான வெளிப்பாடு இது போன்ற அறிவிப்புகளில் தான் முழுமை அடைகிறது. அதனைத் தான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செய்துள்ளார்கள்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர், பெரியார் பிறந்தநாளில் உறுதிமொழி, அம்பேத்கர் பிறந்த நாளில் உறுதிமொழி, மாணவர் விடுதிகளில் சாதிப் பெயர் நீக்கம், தெருக்களில் சாதிப் பெயர்கள் நீக்கம்.... இப்படி எத்தனையோ சமூகசீர்திருத்த சாதனைகளை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். அந்த வகையில் ஆவணப் படுகொலைகளைத் தடுக்கவும் அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறார்கள்.

இது தொடர்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய உரை என்பது உன்னிப்பாகக் கவனிக்கத்தக்க உரையாக அமைந்திருந்தது. **“நாட்டில் நடைபெறும் சில சம்பவங்கள் நமது மனதை வேதனையடைய வைத்துள்ளன. இதற்காகவா நமது தலைவர்கள் போராடினார்கள், நாம் போராடி வருகிறோம் என்ற வேதனை ஏற்படுகிறது. உலகம் அறிவுமயமாகி வருகிறது. ஆனால், ‘அன்புமயம் ஆவதை எது தடுக்கிறது?’ என்பதுதான் இன்று சீர்திருத்த எண்ணம் கொண்டவர்களை வாட்டி வருகிறது. உலகம் முழுக்க பரவி, அறிவினால் மதிக்கப்பட்டு வரும் நம் தமிழ்ச் சமுதாயம், உள்ளூரில் சண்டை போட்டுக்கொள்வது என்ன நியாயம்?”** என்று கேட்டுள்ள முதல் அமைச்சர் அவர்கள், அனைத்து அரசியல் கட்சிகளும் சமூக சீர்திருத்த பரப்புரையைச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார் முதல் அமைச்சர் அவர்கள்.

‘சாதியை ஒழித்துவிடலாம், சாதிப் பெருமையை ஒழிப்பது சிரமம்’ என்றார் தந்தை பெரியார். ‘நீ வேறு, நான் வேறு என்பது மட்டுமல்ல, நான் உயர்வு நீ தாழ்வு என்று கற்பிப்பது சாதி’ என்றார் அண்ணல் அம்பேத்கர். அதனால் தான் அது சிக்கலுக்குரியதாக இருக்கிறது. இத்தகைய சிக்கலான சாதிய மனோபாவத்தை மனமாற்றங்கள் மூலமாக மாற்ற அனைத்து இயக்கங்களும் தங்கள் பணியை முடுக்கி விடுதல் வேண்டும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் போன்றோர் வழித்தடத்தில் நடப்பவர்க்கு மட்டுமல்ல மற்ற அனைவருக்கும் இந்தக் கடமை இருக்கிறது. பொறுப்பு இருக்கிறது. ஒரு சம்பவம் நடந்ததும், ‘இது தான் பெரியார் மண்ணா?’ என்று மண் மாதிரி கேட்காமல், ‘இத்தகைய கொடூரத்துக்கு எதிராக, அதனைத் தடுக்க நாம் என்ன செய்தோம்?’ என்ற கேள்வியை குற்றம் சாட்டுபவர்கள் தங்களது மனச்சாட்சியை நோக்கி எழுப்பிக் கொண்டு செயல்பட வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.10.2025 அன்று சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, வடகிழக்குப் பருவமழை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் ஆயத்த நிலைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்தியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கோ.சண்முகநாதன் துணைவியார் அண்மையில் மறைந்த திருமதி யோகம் சண்முகநாதன் அவர்களின் இல்லத்திற்குச் சென்று அவரது திருவுருவப்படத்திற்கு திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் குடும்பத்தினர் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்த

# உலக புத்தொழில் மாநாடு வெற்றி! ரூ.127 கோடி முதலீடுகள் ஈர்ப்பு!

## புதிய வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும்!

*சென்னை அக். 22 - முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவையில் தொடங்கி வைத்த உலக புத்தொழில் மாநாட்டில் 45 நாடுகள் பங்கேற்று ரூ.127 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. உலக புத்தொழில் மாநாட்டை கோவையில் உள்ள கொடிசியா வர்த்தக வளாகத்தில் கடந்த 9ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதில் பேசிய முதல்வர், தமிழ் நாட்டில் முதலீட்டு சூழலை வலுப்படுத்தும் நோக்கில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் இணை உருவாக்க நிதியத்தினை அறிவித்தார்.*

*இதையடுத்து பெல்ஜியம் நாட்டினைச் சேர்ந்த ஹப் பிரசல்ஸ் என்னும் அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட 2 தமிழ்நாட்டினை சேர்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கு அந்நாட்டில் நிறுவனங்களின் விரிவு செய்வதற்கு அனுமதி கடிதங்களை வழங்கியது. குறிப்பாக 2 நாட்களில் 72,278 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். இது நாட்டின் மிகப்பெரிய புத்தொழில் மாநாடாக அமைந்தது. மாநாட்டில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் 609 ஆளுமைகள் உரை நிகழ்த்தியுள்ளனர்.*

*தொழில் முனைவு ஆளுமைகள் பலரும் இணைந்து கொள்கை வடிவமைப்பு புத்தாக்க தொழில்கள், நிலைத்த வளர்ச்சி மற்றும் உலக நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு குறித்து தங்கள் கருத்துக்களை பகிர்ந்தனர். முதலீட்டாளர் சந்திப்பு அமர்வுகள் மாநாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக அமைந்தன. 115 முதலீட்டாளர்கள் பங்கேற்றனர். 453 புத்தொழில் நிறுவனங்கள் முதலீட்டாளர்கள் முன் தங்களது நிறுவனங்களை அறிமுகப் படுத்தினர்.*

*இதன் மூலம் முதலீட்டு வாய்ப்புகள் வழிகாட்டுதல் மற்றும் இணைப்பு முயற்சிகள் உருவாகின. மாநாட்டுக்கு முன்பாக ரூ.127.09 கோடி முதலீட்டு உறுதிப்பாடு கிடைத்தது. மேலும் பல ஒப்பந்தங்கள் அடுத்த மாதங்களில் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1012 அரங்குகளுடன் மாபெரும் புத்தொழில் மற்றும் புத்தாக்க கண்காட்சி நடைபெற்றது. இதில் 21 நாடுகளில் இருந்து அரங்குகள் அமைத்திருந்தனர்.*

*12 பெரு நிறுவனங்கள், இந்தியாவின் பிற மாநிலங்களை சார்ந்த 8 புத்தொழில் இயக்கங்கள், புத்தொழில் மற்றும் புத்தாக்க தொழில் முனைவோர்களுக்கு ஆதரவு தரும் தமிழ்நாடு மற்றும் ஒன்றிய அரசின் துறைகள் அனைத்தும் பங்கேற்று இருந்தன. கோவையை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பெண் தொழில்முனைவோர்களுக்கான பிரத்யேகமான அரங்கம் ஆகியவையும் கண்காட்சியில் இடம் பெற்று இருந்தன. கூகுள், மெட்டா, போன்பே போன்ற நிறுவனங்களின் தனித்துவமான பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.*

*பிரான்ஸ் நாட்டின் லிங்க் இன்னோவேஷன்ஸ், கனடா நாட்டின் ஆர்எக்ஸ்என் ஹப், ஜெர்மனி நாட்டின் ஆசியா பெர்லின் அமைப்பு உள்ளிட்ட பன்னாட்டு தொழில் அமைப்புகள் மற்றும் முன்னணி கார்ப்பரேட் நிறுவனங்கள் பலவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறி கொள்ளப்பட்டுள்ளன. 2 நாட்களில் மொத்தம் 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறி கொள்ளப்பட்டன.*

*இதனால் தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு உலகளாவிய அளவில் புதிய சந்தை வாய்ப்புகள் உருவாகும். மேலும் சிறப்பு வாய்ந்த தொழில்வளர் பயிற்சிகள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும். தமிழ்நாட்டின் புத்தொழில் சூழல் வலுப்பெற்று முதலீட்டாளர்களின் நம்பிக்கை உயர்ந்து வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். இது தமிழ்நாட்டை 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உருவாக்கும் இலக்கை நோக்கி நகர்த்தும் முக்கிய அடித்தளமாக அமைந்தது.*

